

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவளூர் ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் கே.எம்.ஆர்.க.குமணன், ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி சங்கரிகுமார், ஊராட்சி மன்ற தலைவர் திருமதி சித்ரா பாபு உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

24–03–2025 நிகழ்வுகள்



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

நாடாளுமன்றத்தில் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக நடந்த கூட்டு நடவடிக்கைக் குழு மற்றும் அதன் தீர்மானங்கள் குறித்து விவாதிக்க திமுக துணை பொதுச்செயலாளரும் திமுக நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் இன்று காலை மக்களவையில் ஒத்தி வைப்பு தீர்மானம் கொண்டு வந்தார்.

**மும்மொழிக் கொள்கையின்கீழ் மாணவர்கள் கற்கும் மற்ற மொழிகள் யாவை?**

**தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி கேள்வி**



நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் மும்மொழிக் கொள்கையின் கீழ் கற்பிக்கப்படும் மொழிகளின் விவரங்கள் குறித்து திமுக நாடாளுமன்றக் குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் தாய்மொழி தவிர மற்ற மொழிகளைப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள், இந்தி பேசும் மாநிலங்களில் இந்தி அல்லாத இந்திய மொழிகளைப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள், தமிழ்நாட்டில் உள்ள கேந்திரிய வித்யாலயாக்களில் (கே.வி) தற்போது பணிபுரியும் தமிழ், இந்தி மற்றும் சமஸ்கிருத ஆசிரியர்களின் எண்ணிக்கை விவரங்கள் முதலியவற்றை வெளியிடக் கேட்டு ஒன்றிய அரசிடம் கோரியுள்ளார்.

அதேபோல் மாணவர்களுக்கு அவரவர் தாய்மொழிகளில் கற்பிக்க கே.வி.க்கள் கொள்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கையும் வைத்துள்ளார்.

**கேலோ இந்தியா திட்டத்தின்கீழ் கிராமப்புற மாணவர்களை ஊக்குவிக்கக் கோரிக்கை**

**தருமபுரி அ.மணி**



கேலோ இந்தியா திட்டத்தின்கீழ் ஊக்குவிப்பதற்காக அடையாளம் காணப்பட்டுள்ள பாரம்பரிய விளையாட்டுகள் குறித்து தருமபுரி மக்களவை உறுப்பினர் அ. மணி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

எஸ்சி/எஸ்டி/ஓபிசி மாணவர்கள் அதிகமாக இருக்கும் கிராமப்புற மற்றும் தொலைதூர பழங்குடிப் பகுதிகளில் விளையாட்டு வசதிகளை மேம்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள், பள்ளி மாணவர்களின் திறமையைக் கண்டறிந்து, சர்வதேச அளவில் பங்கேற்க அவர்களுக்குப் பொருத்தமான வாய்ப்புகள் மற்றும் பயிற்சியை வழங்குவதற்கான அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்களின் விவரங்கள், நாட்டில் விளையாட்டை ஊக்குவிக்க மாணவர்களுக்கு மேலும் அதிக வசதிகளை உருவாக்க ஒன்றிய அரசு வகுத்துள்ள புதிய திட்டங்கள் யாவை எனவும் அவர் கேட்டுள்ளார்.

**கேலோ இந்தியா திட்டத்தின்கீழ் கிராமப்புற மாணவர்களை ஊக்குவிக்க கோரிக்கை**

**காஞ்சிபுரம் திமுக எம்.பி. செல்வம் மற்றும் திருவண்ணாமலை திமுக எம்.பி. சி.என்.அண்ணாதுரை கேள்வி**





நடப்பு நிதியாண்டில் திறன் இந்தியா திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்ற மற்றும் பணியமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை குறித்து மக்களவையில் திமுக எம்.பி.க்கள் செல்வம். ஜி மற்றும் சி.என். அண்ணாதுரை ஆகியோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்தத் திட்டம் நாட்டின் தொலைதூர மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள ஏழை மற்றும் கிராமப்புற சமூகங்களைச் சென்றடைவதை உறுதி செய்ய அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள், கடந்த மூன்று ஆண்டுகளில் திறன் இந்தியா திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கை, பயிற்சி பெற்ற இளைஞர்களின் வேலைவாய்ப்பு திறனை மேம்படுத்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட குறிப்பிட்ட நடவடிக்கைகள், மேற்படி திட்டத்தின் வெற்றி விகிதத்தை மதிப்பிடுவதற்கு உருவாக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு முறையின் விவரங்கள் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவதில் மேற்படி திட்டத்தின் தரம் மற்றும் செயல்திறனை அரசாங்கம் எவ்வாறு கண்காணிக்கிறது எனும் விவரங்கள் ஆகியவற்றை வெளியிடுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில்

# புதுச்சேரியில் - மாநில தி.மு.க. சார்பில் இப்தார் நோன்பு திறப்பு!

## இந்தியா கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பு!

பாண்டிச்சேரி, மார்ச். 25 -

புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில் நடைபெற்ற இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்றனர்.

புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில், ஆண்டுதோறும் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடத்துவது வழக்கம். அதன்படி, நேற்று முன்தினம் மாலை வில்லியனூர் தொகுதிக்கு உட்பட்ட சுல்தான்பேட்டை முகம்மதியா மஹாலில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமை தாங்கினார்.

சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில அமைப்பாளர் முகம்மது ஹாலித் வரவேற்றார்.

சுல்தான்பேட்டை அல்மதினா பள்ளிவாசல் இமாம் முகம்மது மூசா மண்பயி, ஜெய்னுதீன் பாகவி ஆகியோர் சிறப்பு பிரார்த்தனை செய்ய முஹம்மது ரபீக், ராஜ்முகம்மது, அஹமது, அஹமதுல்லா, அப்துல் ரசீது, சித்திக், நிஜாம், சுகுது, இஸ்மாயில், ரிராஜுதீன், யாசின், இஸ்மத், தைபு, இக்பால், அபுசாலி, ஜாகீர்உசேன், பஜிலுதீன், சையது அலி உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு பிரார்த்தனை செய்து நோன்பு திறந்தனர்.

இப்தார் விருந்து நிகழ்ச்சியில் முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அனிபால் கென்னடி, செந்தில்குமார், சம்பத், வைத்தியநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சலீம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி முதன்மை செயலாளர் தேவபொழிலன், தொகுதி செயலாளர் பழநி, ம.தி.மு.க. கபிரியேல், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழக மாவட்ட தலைவர் சகாபுதீன், சிபிஐ அந்தோணி,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் சண். குமரவேல், பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், இராமசாமி, செல்வநாதன், தர்மராஜ், தொகுதி செயலாளர்கள் மணிகண்டன், சக்திவேல், வடிவேல், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு, வர்த்தகர் அணி ரமணன், அயலக அணி அமைப்பாளர் ஷாஜகான், தலைவர் முகம்மது தாஹா, துணைத் தலைவர் பக்ருதீன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் பஜிலுதீன், இலக்கிய அணி துணை அமைப்பாளர் கலிமுல்லா, வர்த்தகர் அணி துணைத் தலைவர் ஹாஜி முகம்மது, தொமுச அங்காளன், சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு துணை அமைப்பாளர் ஷேக், அவைத்தலைவர் ஜலால், செயற்குழு உறுப்பினர் அக்பர்,

தகவல் தொழில்நுட்ப அணி அசாருதின், கிளைச் செயலாளர்கள் முகம்மது சுல்தான், கமால் பாஷா, அன்சாரி, சிராஜிதீன் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள், முஹம்மதியா பள்ளிவாசல் தலைவர் மற்றும் நிர்வாகிகள், அனைத்து பள்ளிவாசல்களின் முத்தவல்லிகள், உலமாக்கள், இஸ்லாமிய இயக்க நிர்வாகிகள், ஊர் ஜமாத்தார்கள் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119[அ]வட்ட கழக சார்பில், வி.பி.ராமன் சாலை வி.எம்.தெரு சந்திப்பில், முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு, கழக அரசின் நான்கு ஆண்டு சாதனை மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம். நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி, வட்ட செயலாளர் லைனர்.கே.பிரபு தலைமையிலும், பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், மாவட்ட துணை செயலாளர்,ஆர்.என்.துரை, ஆகியோர் முன்னிலையில், சென்னை மேற்கு மாவட்டசெயலாளர் நே.சிற்றரசு 1080, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தலைமை கழக பேச்சாளர்கள் சைதை சாதிக், செல்வி.பார்கவி கமல்நாதன், சிறப்புரையாற்றினர். இந்த நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஒன்றிய அரசை நேரடியாகவும் கடிதம் மூலமும் வலியுறுத்துவோம்!

# சேலம் மாநகராட்சியைச் சுற்றி ‘வெளிவட்டச் சாலை’ அமைக்கும் திட்டம்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு விரிவான விளக்கம்!

சென்னை, மார்ச் 25 -

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது பேசிய பொதுப்பணிகள் மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, “சேலம் மாநகராட்சியைச் சுற்றி வெளிவட்டச் சாலை அமைக்கும் திட்டம்” குறித்து விரிவான விளக்கமளித்தார்.

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

**இரா.அருள்:** சேலம் மாநகர், சுற்றுச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**அமைச்சர் எ.வ.வேலு:** சேலம் மாநகராட்சியைச் சுற்றி வெளிவட்டச்சாலை அமைக்க விரிவான சாத்தியக்கூறுDetailed Feasibility Report (DFR) ஆராயப்பட்டுவருகிறது.

**இரா. அருள்:** சேலம் என்பது மிகப்பெரிய ஒரு நகரம். மிகப்பெரிய அளவில் வளர்ந்துவரக்கூடிய நகரம். அந்த நகரத்தைப் பொறுத்த வரையில், சேலத்தில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருக்கிறது. உள்வட்ட சாலை என்பது, ஒரு ring road என்பது மிகவும் அவசியமானது.



அமைச்சர் அவர்கள் அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**எ.வ. வேலு:** சேலம்பெங்களூரு சாலையில், கமலாபுரம் விமான நிலையம் பகுதியில் தொடங்கி தாரமங்கலம், இளம்பிள்ளை, நடுவனேரி, காக்காபாளையம், ஆட்டையாம்பட்டி மற்றும் வெண்ணந்துார் வழியாக மல்லூர் இணையும் வகையில் 45 கிலோ மீட்டர் நீளத்திற்கு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலமாக நடைபெற்று வருகிறது.

மற்றொன்று, உறுப்பினர் குறிப்பிட்டபடி, ஒரு வெளிவட்டச் சாலை அமைக்க கமலாபுரம் விமான நிலையம் பகுதியில் தொடங்கி ஏற்காடு, அடிவாரசாலை, திருப்பத்தூர், வாணியம்பாடி சாலை, கருமந்துரர் சாலை ஆகியவற்றைக் கடந்து சேலம், உளுந்தூர்பேட்டை மின்னம்பா ளைத்தில் இணையும் வகையில் சாலை அமைக்க போக்குவரத்துச் செறிவு, நில எடுப்பு, மதிப்பீடு, திட்டப் பணிகள் மதிப்பீடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். மின்னம் பாளையத்திலிருந்து மல்லூர் செல்லும் பகுதியிலே மலை அதிகமாக இருக்கிற காரணத்தினால், அந்தப் பகுதியிலே சாலை அமைப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை. ஆக, மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு, இரண்டு கட்டங்களுக்குரிய DAPRம், DPRம் தயாரிக்கும் பணி இப்போது நடைபெற்று கொண்டிருக்கிறது. அதை விரைந்து செயலாற்றுவதற்கு ஒன்றிய அரசாங்கத்திற்கு நேரடியாகவும் அல்லது கடிதம் மூலமாகவும் வலியுறுத்தப்படும்.

மேலும் - ஐந்து road பகுதியிலே பொதுவாக நெடுஞ்சாலை துறை சாலையிலே கழிவுநீர் வடிகால் அமைப்பதில், மழைநீர் வடிகால் மட்டுமே அமைக்கப்பட்டு வருகின்றது. கழிவுநீர் வடிகால்கள் நெடுஞ்சாலைத் துறையால் அமைக்கப்படுவதில்லை. அதையெல்லாம் Corporation தான் அமைப்பார்கள். இருப்பினும் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நெடுஞ்சாலைத் துறை பராமரிப்புள்ள இச்சாலையின் 1.2 கிலோ மீட்டர் நீளத்தில் மழைநீர் வடிகால் அமைப்பதற்கு அரசின் நிதிநிலைமைக்கேற்ப இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும். இன்னொன்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பாலத்தினை box culvert பாலமாக தரமுயர்த்தும் பணி அரசின் நிதிநிலைக்கேற்ப இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும். உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலை நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பிலுள்ள செவ்வாபேட்டை, இளம்பிள்ளை சாலையாகும். ரவுண்டானா முதல் மூலப்பிள்ளையார் கோயில் வரையுள்ள சாலைக்கு மழைநீர் வடிகால் அமைப்பதற்கு அரசின் நிதிநிலைக்கேற்ப அதையும் பரிசீலிக்கப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

## கருப்பை வாய் புற்றுநோய் – மார்பக புற்றுநோய் கண்டறிவதற்குரிய

# முழு பரிசோதனைகள் விரைவில் தொடங்கவிருக்கின்றன!

## சட்டப்பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, மார்ச் 25-

கருப்பைவாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய் கண்டறிவதற்குரிய பரிசோதனைகள் இன்னும் 10 நாட்களில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் முதன்முறையாகத் தொடங்கப்படவிருக்கின்றன என்று சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

**ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

பனைமடல் கிராமம் 2,550 மக்கள் தொகை கொண்டது. இது தும்பல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட பகுதியில் உள்ளது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் 5 மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டு, 24 மணி நேரமும் மருத்துவ சுகாதார நிலையத்தில் 5 மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டு 24 மணி நேரமும் மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பனைமடல் கிராமத்திலிருந்து தாண்டானூர் துணை சுகாதார நிலையம் இரண்டரை கிலோ மீட்டர் தூரத்திலும், 8 கிலோ மீட்டர் தொலைவில் தும்பல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், பனைமடல் கிராமத்திலிருந்து ஏத்தாப்பூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 9 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது.

பனைமடல் கிராமத்தில் உள்ள மக்கள், தாண்டானூர் துணை சுகாதார நிலையத்திலிருந்து eSanjeevini முறையில் தும்பல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவரை தொடர்பு கொண்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். எனவே அரசு வழிகாட்டு நெறிமுறைகளின் படி, பெத்தநாயக்கன்பாளையம் வட்டாரத்திலுள்ள பனைமடல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை தங்களின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பனைமடல் பகுதியில் 2,550 மக்கள் தொகை இருக்கிறது. எதிர்க்காலத்திற்கு துணை சுகாதார நிலையங்கள் புதிதாக கேட்கப்பட்டிருக்கின்றன. புதிய துணை சுகாதார நிலையங்கள் வரும்பட்சத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, புதிய துணை சுகாதார நிலையம் ஒன்று அமைத்துத் தருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனையாது, ஏற்கெனவே இயங்கி வந்த ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு அரசு மருத்துவனையாக இயங்கி வருகிறது. தற்போது 6 மருத்துவர்கள் பணியில் இருக்கிறார்கள். பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனை அருகில் 15 கி.மீ. தொலைவில் ஆத்தூர் அரசு மருத்துவமனையும், 10 கி.மீ. தொலைவில் வாழப்பாடி அரசு மருத்துவமனையும், Post mortem வசதியுடன் இயங்கி வருகிறது. எனவே, புதிய Post mortem பெத்தநாயக்கன்பாளையத்திற்கு தேவையில்லை என்றாலும் உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

இந்த அரசு அமைவதற்கு முன்புவரை, இதய பாதிப்புகள் உள்ளவர்களுக்கும் அரசு மருத்துவமனைகள், மாவட்ட அரசு மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு சென்றுதான் மருத்துவம் பார்க்க வேண்டிய நிலை இருந்தது. எனவே, மாரடைப்பு, இருதய நோய்கள் வருகிறவர்களுக்கு அவரவர்கள் வசிக்கும் பகுதிகளிலேயே மருத்துவ வசதியை அளித்திட வேண்டுமென்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய உயர்ந்த இலட்சிய நோக்கத்தின் விளைவாக தமிழ்நாட்டிலிருக்கிற துணை சுகாதார நிலையங்கள் 8,713லும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் 2,286லும் loading doses என்று சொல்லக்கூடிய 14 மாத்திரைகள் aspirin, clopidogrel, atorvastatin என்கின்ற இந்த 3 வகையான 14 மாத்திரைகள் உடனடியாக வழங்கி உயிர் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை 2023 ஜீன் திங்கள் 27-ஆம் தேதி மதுக்கரை ஒன்றியம், மலுமிச்சம்பட்டியில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் இதுவரை 15,886 பேர் பயன்பெற்று இருக்கிறார்கள், உயிர்பெற்றிருக்கிறார்கள் என்பதை தங்களின் வாயிலாக மன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

கடந்த 2 வாரங்களுக்கு முன்னால், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, ஒன்றிய அமைச்சரை சந்தித்து, புதிதாக 50 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 500 துணைச் சுகாதார நிலையங்களும் வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்து ஒப்புதல் கிடைக்கப் பெற்றதற்குப் பிறகு, எங்கெங்கே விதிமுறைகளின்படி இடம் கிடைக்கிறதோ அங்கே ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

இதற்கு முன்னாள் கூறிய பதில்தான் அவருக்கும் பொருந்தும். நிச்சயம் எந்தெந்த இடத்தில் அமைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கிறதோ, சாத்தியக்கூறுகள் இருக்கிறதோ ஆராய்ந்து அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மிகத் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். 14 வயதுடைய இளம் சிறுமிகளுக்கு கருப்பைவாய் புற்றுநோயைத் தடுப்பதற்கு, கண்டறிவதற்கு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக இன்றைக்கு HPV என்கின்ற தடுப்பூசி ரூ.37 கோடி செலவில் போடப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற வருவாய் மாவட்டங்களில் வாய் புற்றுநோய், கருப்பைவாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய் என்று அனைத்து வகையான புற்றுநோய்களையும் கண்டறிவதற்குரிய முழு பரிசோதனைகளையும் இன்னும் 10 நாட்களில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் முதன்முறையாகத் தொடங்கப்படவிருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில் கிருஷ்ணகிரியிலும் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது என்பதையும் தங்களின் வாயிலாக மன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பதிலளித்தார்.



சைதை மேற்கு பகுதியில் 142, 142 அ, 139, 139 அ ஆகிய நான்கு வட்டங்களிலும் பாக முகவர்கள், பாக களப்பணியாளர்கள், மற்றும் தகவல் தொழில்நுட்ப அணியின் நிர்வாகிகளுடன் ஒருங்கிணைந்து ஆலோசனைக்கூட்டம் வட்ட கழக செயலாளர்கள் சை.மு.சேகர், எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோ கமலநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு எம்.கிருஷ்ணமூர்த்தி, பரிதிஇளம்சுருதி ஆலோசனைகளை வழங்கினர். வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., எம்.எஸ்.ஹரிபாபு, களக்காடி எல்லப்பன், ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன், நா.மணிகண்டன், சைதை சாதிக், ஆர்.கிருஷ்ணகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.